**அயகம பிரதேச சபையி - 2023**

------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அயகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு தொடற்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய கூற்றுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அயகம பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு தரநியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள்,

பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றது எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 கட்டிடங்கள் நிர்மாணிப்புக்காக செலவிடப்பட்ட ரூபா 1,520,171 மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | ஒரு நிர்மான வேலை 2024 ஆம் வருடத்தில் சீர் செய்யப்படுவதோடு மற்றைய நிர்மாணத்துக்குரிய நிலம் கையகப்படுத்தலுக்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (ஆ) | இழுவை பெட்டியொன்றுக்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 181,075 மீண்டுவரும் தன்மையிலான திருத்த வேலையொன்று மூலதனமாக்கப்பட்டிருந்தது. | 2024ஆம் வருடத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |
| (இ) | ரூபா 122,180 பெறுமதியான நூல் நிலைய புத்தகங்கள் மூலதன | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | வருமானமொன்றாக மற்றும் செலவொன்றாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 03 கணக்கீட்டு விடயங்களுக்குரிய 2023 டிசம்பர் 31ஆம் திகதி நிதி கூற்றின் பிரகாரம் மற்றும் உப பதிவேட்டு ஆவணத்தின் பிரகாரம் மீதிகளுக்கு இடையில் ரூபா 120,542,561 வேறுபாடொன்று காணப்படுகின்றது. | சொத்துக்கள் மீள் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படும். தொழிற்பாட்டு கடன் கொடுத்தோர் கணக்கின் வேறுபாடு 2015ஆம் வருடத்திற்கு முன்னிருந்து காணப்படுகிறது. | வேறுபாட்டுக்கான காரணத்தை அடையாளம் கண்டு தீர்க்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| விடயம் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டு மொத்தம் ரூபா 24,780,073ஆன 03 கணக்கு விடயங்களுக்காக விரிவான உப பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2024 வருடத்திலே விபரமான உப பதிவேடு சமர்ப்பிக்கப்படும். | விரிவான உப பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 4,855,682 தொகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 4,455,454 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

செயளாலரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவள்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலி டப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலி டப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| வீதவரியும் வரியும் | 2,212,380 | 1,566,791 | 1,513,157 | 655,413 | 1,287,560 | 1,263,910 | 1,246,874 | 581,796 |
| வாடகை | 8,432,770 | 8,207,927 | 7,607,873 | 1,361,237 | 7,703,612 | 8,423,573 | 8,909,463 | 909,920 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 790,160 | 651,300 | 559,491 | - | 517,410 | 517,390 | 482,840 | 11,000 |
| ஏனைய வருமானம் | 859,500 | 618,288 | 513,720 | 1,041,179 | 710,000 | 491,840 | 485,576 | 12,593 |
| | 12,294,810 | 11,044,306 | 10,194,241 | 3,057,829 | 10,218,582 | 10,696,713 | 11,124,753 | 1,515,309 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | முறையான மதிப்பீடொன்றில்லாமல் மற்றும் டெண்டர் கோரப்படாமலும் 2014 மற்றும் 2015 ஆம் வருடங்களிலே குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 02 கடையறைகளின் குத்தகையாளர்களுடன் வருடாந்த ஒப்பந்தம் கை சாத்திடப்பட்டிருக்கவில்லை. அத்தோடு 2023 ஆம் வருடத்திற்கான மூன்று மாத ஒப்பந்தப் பிணை மற்றும் நிலுவை வாடகை ரூபா 135,824 வும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது சபையின் தீர்மானமொன்றாகும். நிலுவை வாடகை 06 மாதங்களுக்குள் செலுத்தி முடிப்பதற்கு இணங்கியிருந்தது. | நிலுவை வருமானங்கள் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | விவசாய உற்பத்திகள் விற்பனை நிலையத்தின் 02 கடையறைகளுக்கான 2021 ஆம் வருடத்தில் இருந்து 2023 டிசம்பர் வரை ரூபா 99,550 வாடகை அறவிடப்பட வேண்டி யிருந்தது. 03 மாதங்களுக்கு வாடகை செலுத்தப்படாத போது உரிமையை கைப்பற்றுவதற்கு மற்றும் நிலுவைக்கான தாமதக் கட்டணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நிபந்தனைகள் எதுவும் ஒப்பந்தத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | அறவிட்டுக் கொள்வதற்கான அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 03 வருடங்களுக்கு மேலான பழைய ரூபா 151,993 ஆன ஏக்கர் குத்தகை வாடகை மீதி ஒன்று நிலுவையாக காணப்பட்டுள்ளது. | நிலுவை அலகுகளின் எண்ணிக்கை 166 வரை குறைந்துள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | தற்காலிக அறிவித்தல் பலகைகளின் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்க வில்லை. | 10 நிலையான அறிவிப்பு பலகைகளு க்காக மட்டும் சபைக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | -மேற்படி- |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பொதுப் பாவனைச் சேவைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தும்பறையிலிருந்து இரத்தினபுரி பானதுறை பிரதான பாதைக்கு குறுகிய பாதையான தும்பற துறைமுகத்தின் படகு சேவை 2020 வருடத்திலிருந்து செயலிழந்து காணப்பட்ட போதிலும் அது 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரையும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் வருடத்திலிருந்து அந்த துறைமுகத்தை செயல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பிரதேச மக்களின் தேவைகள், பொது வசதிகள் என்பன பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். |

**3.2 திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவுகள் 4.2 மெட்ரிக் டொன் அளவான தொகையை அகற்றுவதற்காக 2023 ஆம் வருடத்திலே பதவி அணியினருக்கான சம்பளம் மற்றும் வாகனங்களை பராமரிப்பதற்காக ரூபா 4,676,896 செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த கழிவுகள் சுற்றாடல் நேயத்தன்மையின்றி திறந்த நிலப்பகுதியில் கொட்டப்பட்டிருந்தது. | தற்போது உக்கிப் போகும் கழிவுகள் முறையாக அகற்றப்பட்டுள்ளது. | திண்மக்கழிவுகள முறையாக முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அதிகார பிரதேசத்தினுள் காணப்படுகின்ற அனுமதியற்ற 43 நிர்மான பணிகளை முறைமைப்படுத்துவதற்கு அல்லது நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இதற்கான சட்ட ஏற்பாடுகள் போதிய அளவுடையதாக இல்லை. | அதிகாரச் சட்டத்தின் முறைமையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.4 முறையறடற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான கட்டிடம் ஒன்றில் இடம்பெற்று வருகின்ற முன் பள்ளி பிள்ளைகளிடமிருந்து 2023 ஆம் வருடத்திலே அறவிடப்பட்ட ரூபா 1,776,000 பணத்தை சபைக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் முன் பள்ளி ஆசிரியைகளிடம் அது பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரினுள் முன்பள்ளி ஆசிரியர் பதவியொன்று அங்கீகரிக்கப்படாததன் காரணமாக இந்த கட்டணம் சபையினால் சேகரிக்கப்பட்டு அறவிடப்பட்டு ஆசிரியைகளுக்கு கொடுப்பனவை மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் சபையின் கட்டிடமொன்றுக்கான வாடகையை அறவிட்டுக் கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையின் அனுமதிக்கப்பட்ட பதவி அணியினரில் முன் பள்ளி நிர்வாக பதவி ஒன்று இல்லாததன் காரணமாக அவர்களுக்கு நிச்சயக்கப்பட்ட சம்பளம் ஒன்றை தீர்மானிக்க முடியாதிருந்தது. முன்பள்ளி பிள்ளைகளிடமிருந்து அறவிடப்படுகின்ற தொகையையும் சபையினால் தீர்மானித்திருக்கவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிருபம் 01/2021 இன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அ<br>512 நீர் பாவனையாளர்களுக்கு நீர் விநியோகம் பெற்றுக் கொடுக்கப்பட்டு 2023 ஆம் வருடத்தினுள் சேகரிக்கப்பட்ட வருமானத்திலும் மேலதிகமாக ரூபா 382,066 செலவிடப்பட்டிருந்தது. | பணம் இல்லாததன் காரணமாக நீர் மானி பொருத்தப்படவில்லை. நீர் மானி பொருத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நீர் மானியை பொருத்தி வருமானத்தை அறவிட்டு கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.6 வாகனத் தொகுதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான திருத்தம் செய்து பாவனைக்கு உட்படுத்த முடியுமான நிலையில் உள்ள உழவு இயந்திரம் ஒன்று மற்றும் இழுவை பெட்டியொன்று 05 வருடம் தொடக்கம் 08 வருடம் வரையிலான காலமாக பாவனைக்குட்படுத்தப்படாமல் காணப்பட்டது. | நிதி ஏற்பாடானவுடன் உழவு இயந்திரத்தை திருத்தம் செய்து பாவனைக்கு உட்படுத்தப்படும். இழுவை வண்டியை நீக்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக உபயோகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |